[1990 மே 11

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குழுவின் முடிவுகளை அரசு ஆய்வு செய்து வருவதாக, பரிசீலித்து வருவதாக அமைச்சரவர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். இது எப்போது நடைமுறைப்படுத்தப்படும்? குறிப்பாக மின்சார வாரியத்தில் 15,000 முதல் 20,000 கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் நிரந்தரமாக அந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அங்கே 25,000-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருக்கின்றன. எனவே நிரந்தரமாக அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் அந்தத் தொழிலாளர்களை காலி இடங்களில் நிரப்ப அரசு மின்சார வாரியத்தை வலியுறுத்துமா, அதை நடைமுறைப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. நிர்வாகத்திலே வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்திலே போடப்பட்டு, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அதிகமான விவரங்களைச் சபையில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம்.

*4410—திரு. கோ. வீரையன்:
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அமல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதற்காக செய்யப்பட்டு இருக்கும் நிர்வாக ஏற்பாடு என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இச்சட்டம் தொழிலாளர் ஆணையரால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் துறையின் தொழிலாளர் ஆய்வாளர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள், தொழிலாளர் உதவி ஆய்வர்கள் போன்ற அலுவலர்கள் இச்சட்ட அமுலாக்கத்தினைக் கண்காணித்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
9—55 மணி

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் இந்த கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்

1990 மே 11]

பட்ச ஊதியச் சட்டத்தை அமலாக்குவதற்கான நிர்வாக ஏற்பாட்டை கமிஷனர் அவர்கள் கவனித்து வருகிறார்கள், துணை ஆய்வாளர்கள் எல்லாம் கவனித்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி கவனிப்பார்களேயானால் அந்தக் கட்டுமானப் பணியாளர்களிடமிருந்து குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்படவில்லையென்று முறையீடுகள் அரசுக்கு ஏதாவது வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் எத்தனை வந்திருக்கின்றன? அதன் மீது எடுக்கப்பட்ட, தீர்க்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டில் அரசின் சார்பாக குறைந்தபட்ச ஊதியத் திட்டத்தின் கீழ் 70 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டபோது ஆரம்பத்திலேயே இந்தத் தொழிலாளர்களையும் சேர்த்திருக்கின்றார்கள். குறிப்பாக பல்வேறு ஆண்டுகளில் இவர்களுடைய ஊதியம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. 1957 ஆம் ஆண்டும், அதன் பிறகு 1 965 ஆம் ஆண்டும் அதன் பிறகு 1976 ஆம் ஆண்டும், அதன் பிறகு 1983 ஆம் ஆண்டும், தற்போது 1988 ஆம் ஆண்டிலே அவர்களுடைய ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டபோது குறைந்தபட்சமாக 23.72, அதிகபட்சமாக 43.72 என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் எங்காவது குறிப்பிட்ட இந்த இந்தப் பகுதியில் இருக்கிறது என்று சொன்னால் ஆய்வாளர்களை விட்டு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளச் சொல்ல முடியும். அவர்கள் கேட்ட கணக்கு இப்பொழுது கையிலே இல்லை. தனியாக ஒரு கேள்வி கேட்பாரேயானால் அதற்கு விரிவான பதிலை அளிக்க முடியும்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக 1988 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டபோது ரூ. 23.72, உயர்ந்தபட்சம் ரூ. 43.72 என்று நிர்ணயிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே பணிபுரியக் கூடிய பெண் ஊழியர்களுக்கு மிகக் குறைவான ஊதியம் கொடுக்கப்படுகிறதே. இதிலே ஆண், பெண் என்று வித்தியாசப்படுத்தி ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது ஒரே மாதிரி ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அவர்கள் அப்படி வித்தியாசப்படுத்திக் கொடுக்கிறார்களா என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறையே சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் எந்தப் பகுதியிலே இதுபோல் நடைபெறுகிறது என்று ஆதாரப்பூர்வமாக குற்றம் சாட்டுவா

யானால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் தனிப்பட்ட முறையிலே நிர்ணயிக்கப்படவில்லை. அனைவருக்கும் ஒருமனதாகத்தான் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் நிரந்தரம்.

*5590. திரு. இளம் வழுதி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 480 நாட்கள் தொடர்ந்து பணிபுரியும் அரசுத் துறை தொழிலாளர்களை உடனே நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து பணி புரியும் தொழிலாளரை நிரந்தரம் செய்ய 1981-ம் ஆண்டு தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளரை நிரந்தரப்படுத்து தல்) சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம் மாநில அரசின் அனைத்துத்துறை தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இச் சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்துமாறு தொழிலாளர் ஆணையர் தனது சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கி யுள்ளார். தொழிலாளர்களிடமிருந்து அவர்களாகவே விண்ணப் பங்களைப் பெற்று, சரிபார்த்து நிரந்தரமாக நிர்வாகத்தினருக்கு ஆணையிடவும், சட்ட விதிகளின்கீழ் நிர்வாகத்தினரிடமிருந்து விவரங்கள் பெற்று சட்டப்பிரிவுகள் மற்றும் விதிகளை மீறு வோருக்குத் தண்டனை வழங்கவும் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளனர்.

தொழிற்சாலை ஆய்வகத்துறை, இச்சட்டத்தை தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளில் அமுல் படுத்தப்படுகிறது. தொழிலாளர்கள், சட்டப்படி நிரந்தமாக் கப்பட்டுள்ளனராவென தொழிற்சாலை ஆய்வாளர்கள்